ATR-184

2.406

உ

சிவமயம்



2.406

# மகோற்ஸவ விளக்கம்

தொகுத்தவர்:

சிவத்திரு க. சிவபாதசுந்தரக் குருக்கள்

வெளியீடு:

அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை

1984-05-07

உ
சிவமயம்



# மகோற்ஸவ விளக்கம்

தொகுத்தவர்:

கிரியாவித்தகர், குருமணி
**சிவத்திரு. க. சிவபாதசுந்தரக் குருக்கள்**
மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பளை
இலங்கை.

வெளியீடு:
**அகில இலங்கை சைவக்குருமார்**
**அர்ச்சகர் சபை**
மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பளை.

**இரத்தாக்ஷி ௵ சித்திரை ௴**
1984

வெளியீடு !

அகில இலங்கைச் சைவக்குருமார் அர்ச்சகர் சபை

8 - ஆவது வெளியீடு


பதிப்புரிமை.

அகில இலங்கைச் சைவக்குருமார் அர்ச்சகர் சபையினருக்கே உரியது.



தொகுத்தவர்:-

கிரியா வித்தகர், குருமணி

**சிவத்திரு. க. சிவபாதசுந்தரக் குருக்கள்**

மயிலிட்டி தெற்கு

தெல்லிப்பளை.



அச்சுப்பதிப்பு :-

சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம்

# அணிந்துரை

சைவ ஆலயங்களிலே நடைபெறும் விசேஷ உத்சவங்கள்; கிரியைகள், வழிபாட்டு முறைகள் பற்றிய நிச்சயமான விளக்கங்களை அறிந்து கொள்வதில் சைவமக்கள் மத்தியில் தீவிரவேகம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. ஆலயங்களில் நடைபெறும் பூஜைகள் உத்சவங்களைத் தரிசிப்பதோடு மட்டும் திருப்தியடைந்து வந்தார்கள் சென்றகால மக்கள்; ஆனால் இக்காலத்தில் பூஜைகள் எவ்வாறு செய்யப்படுகின்றன? ஏன் செய்யப்படுகின்றன? ஒவ்வொரு பூஜைகளினதும் பெறுபேறுகள் என்ன. என்பதையெல்லாம் அறிந்து கொள்வதில் சைவ மக்கள் மிக ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள். இச்சமயத்தில் வெளிவரும் இந்நூல் மகோத்சவம் பற்றிய முழுவிளக்கங்களையும் கொண்டதாக இருப்பது போற்றுதற்குரியது. இந்நூலாசிரியர் கையாண்டிருக்கும் இலகுவான நடை சாதாரண சைவ மக்கள் முதல் தர்மகர்த்தாக்கள் வரை எல்லோரும் மகோத்சவம் பற்றி உறுதியான விளக்கம் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் அமைந்திருக்கிறது. சில முக்கிய விஷயங்கள் கூட எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

கொடிமரம் என்ன, சீலை என்ன, கயிறு என்ன என்பது மட்டுமல்ல கொடிமரம் எந்தமரங்களினால் செய்ய வேண்டும். அதனுடைய உயரம் முதலியன எல்லாம் அறிய இனி ஆலயதர்மகர்த்தாக்கள் ஆகமங்களைப் புரட்ட வேண்டிய அவசியமில்லாமல் செய்திருக்கிறார் இந்நூலசிரியர். கொடியேற்றத்திற்கு உள்ள கிரியைகளையும் முறையாக வரிசைப்படுத்தி எடுத்துக் கூறியிருப்பதும் கிரியை ஆற்றுபவர்களுக்கு இது தெளிவாக இருக்கும். மொத்தத்தில் இக்காலத்திற்கு அவசியம் இப்படி ஒரு நூல் தேவை. எல்லா ஆலய தர்மகர்த்தாக்களும் பூசகர்களும் வழிபடுபவர்களும் இதை அவசியம் வாசித்து மகோத்சவம் பற்றிய திடமான விளக்கங்களை அறிந்தவர்களாக சிறப்புற்று வாழ்வார்களாக.

**பிரம்மஸ்ரீ து. மகாதேவசர்மா**
குருகுல அதிபர்
இணுவில்

உ

# பதிப்புரை

அரிய மானிடப் பிறவியை எடுத்த நாம் இறைவனை வழிபாடு செய்து உய்வடைவதற்காக எமது முன்னோர்கள் ஊர்கள்தோறும் ஆலயங்களை அமைத்து அதில் இறைவனைப் பிரதிஷ்டை செய்து வைத்தார்கள். நித்திய பூசைகள் நடைபெறுகின்ற பொழுது தெரிந்தோ தெரியாமலோ ஏற்படும் குறைபாடுகளை நீக்கித் தெய்வீகத்தன்மையைஉண்டாக்குவதற்காக வருடம் தோறும் மகோற்ஸவங்களைச் செய்து வருதல் வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். ஒரு ஆலயத்தில் மகோற்ஸவம் தொடங்கி விட்டால் அந்த ஊரிலே உள்ளவர்கள் வீடுகளில் எந்த வகையான மங்கள காரியங்களும் செய்யக் கூடாது. மகோற்ஸவ காலங்களில் விரதம் அனுஷ்டித்து இரண்டு வேளையிலும் ஆலயத்திற்குச் சென்று வழிபாடுசெய்து தங்களாலான திருத் தொண்டுகளைச் செய்துவருதல் வேண்டும்.

இப்பதிப்பில் மகோற்ஸவத்தில் நடத்தப்படும் கிரியைகளின் சுருக்கமான கருத்துக்களையும், உற்ஸவத்திற்குத் தேவைப்படும் பொருட்களின் விபரங்களையும் சேர்த்துள்ளேன். அடியேனது ஒரே நோக்கம் எமது சமயக்கிரியைகளின் கருத்துக்களையும் வழிபாட்டு ஒழுங்குமுறைகளையும் அறிந்து மக்கள் அதன்வழியில் ஒழுகவேண்டும்என்பதாகும். அடியேனது சிற்றறிவுக்கு எட்டியவகையில் இந்நூலைத் தொகுத்து உங்கள் முன்சமர்ப்பிக்கிறேன். குற்றம் நீக்கிக் குணம் நாடி ஏற்றுக்கொள்ளவும்.

'லோகா சமஸ்தாஸ் சுகினோ பவந்து'.

இப்படிக்கு

16-04-1984. ஆசிரியர்

# மகோற்ஸவம்

## மகோற்ஸவம் - திருவிழா

ஆலயங்களிற் செய்யும் வழிபாட்டுச் செயல்கள் நித்தியம், நைமித்தியம், காமிகம் என மூன்று வகைப்படும். ஒவ்வொரு நாளும் செய்யப்படும் பூசை நித்தியம் எனப்படும். ஒரு காரணம் பற்றி மாதந்தோறும் வரும் விஷேட தின வழிபாடு நைமித்தியகம் எனப்படும். ஒருவர் தாம் இஷ்ட சித்திகளை அடையும் பொருட்டுச் செய்யப்படும் விஷேட வழிபாடு காமியம் எனப்படும்.

நித்திய வழிபாட்டிலே தெரிந்தோ தெரியாமலோ நேரும் குறைபாடுகளை நீக்கும் பொருட்டாகவே ஆலயங்களில் வருடம் தோறும் மகோற்ஸவம் நடைபெறுகிறது. மாங்கல்யம், சாந்திகம், பாவனம், சாகல்யம் என்று நாலுவகையான உற்ஸவங்கள் ஆகமங்களிலே கூறப்பட்டுஇருக்கின்றன.

மாங்கல்யம் என்பது ஒரு நாளிலே செய்யப் படும் விழாவாகும். சாந்திகம் என்பது ஓமமும் பலியும் இல்லாமல் செய்யப்படும் விழாவாகும். இது அலங்கார உற்ஸவம் என்றும் சொல்லப்படும். பாவனம் என்பது யாகதரிசனம், பலியிடுதல் என் பனவற்றுடன் செய்யப்படும் விழாவாகும்.

சாகல்யம் என்பது கொடியேற்றம் முதல் தீர்த் தோற்ஸவம் வரை, யாகம் பலி என்பனவற்றுடன் செய்யப்படும் பெரு விழாவாகும். இப் பெருவிழா பஞ்சகிருத்தியங்களைக் குறிப்பதாகும். வருடப் பெரும் திருவிழாவைக் கொடியேற்று விழாவாகச் செய்வதே மிகவும் சிறந்ததாகும்.

தம்பம், பிம்பம், கும்பம் என்று கூறப்படும் மூன்று இடங்களிலும் இறைவனை எழுந்தருளச் செய்து விஷேட வழிபாடுகளைச் செய்வதே கொடி யேற்று விழாவாகும். கும்பபூசை என்பது ஆலயத் தில் ஈசான திசையில் அமைக்கப்பட்ட யாகசாலை யிலே முறைப்படி கும்பங்கள் ஸ்தாபித்து அதில் இறைவனையும், இறைவியையும்எழுந்தருளச் செய்து காலை, மாலை இரண்டு நேரங்களிலும் பூசை, ஓமம் வழிபாடுகளைச் செய்வதாகும். பிம்ப பூசை என்பது மூலமூர்த்தியாகிய இறைவனுக்கும் பேர மூர்த்தியா கிய இறைவனுக்கும் அபிஷேக ஆராதனைகளை முறைப்படி விரிவாக காலை- மாலை இரண்டு நேரங் களிலும் செய்து வருதலாகும்.

தம்ப பூசை என்பது பலி பீடத்திற்குப் பக் கத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் பதியாகிய கொடி மரத்திலே பசு - ஆன்மா ஆகிய கொடிச் சீலையை

திருவருள் சக்தி துணைக் கொண்டு ஏற்றி பிரதட்சணமாகச் சுற்றிக் கட்டி அந்த இடத்தில் இறைவனையும் இறைவியையும் எழுந்தருளச் செய்து பஞ்சமாவரணம் வரையும் பூசித்து வழிபாடு செய்வதாகும். இவ்வாருக இறைவனைத் தம்பம், பிம்பம் கும்பம் என்று மூன்று இடங்களில் வைத்து வழிபாடு செய்வதினுல் இப் பெருவிழா மிகுந்த பலனைத் தரத்தக்கது. என்று ஆகமங்களிலும், கந்தபுராணம் முதலிய நூல்களிலும் கூறப்பட்டிருக்கின்றது. மகோற்ஸசவம் என்பது மகா + உற்சவம் மகா+ உத்+சவம் என்ற மூன்று பதங்களைக் கொண்டு விளங்குகின்றது. பெரிய+உத்தம+யாகம் எனப் பொருள் படும்.

இறை வழிபாட்டுக்கு உடலையும் உள்ளத்தையும் பக்குவப்படுத்துதல். ஆசாரியர் வழிபாட்டுக்குச் செல்லுமுன் ஸ்நானம் செய்து தனது நித்திய அநுஷ்டான சந்தியாவந்தனங்களை முடித்துக் கொண்டு, வழிபாட்டுக்கு என ஒதுக்கப்பட்ட உடை அணிந்து செல்கின்ருர். ஆலயத்தினுள் சென்ற பின்பும் வழிபாட்டுக்கு முன்பு கரந்நியாசம், அங்கன்நியாசம், பூதசுத்தி, அந்தரியாகம், சிவோகம் பாவனை என்ற ஒழுங்கு முறையிலே பூசைகளைச் செய்து தன்னைச் சிவமாக்கிக் கொண்டு வழிபாட்டைத் தொடங்குகின்ருர்.

அதே போன்று அடியார்களும் வழிபாட்டுக்குச் செல்லு முன்பு ஸ்நானம் செய்து சந்தியாவந்தனம் முடித்துக் கொண்டு தூய சுத்தமான ஆடை அணிந்து கொண்டு செல்லுதல் வேண்டும்.

நாங்கள் கந்தோருக்குச் செல்லுகின்ற பொழுது அதற்கு ஒருவகை உடை. அணிகின்றோம். இதே போன்றுநாங்கள் ஆலய வழிபாட்டுக்கு எனத் தூய சுத்தமான வெள்ளை உடையை ஒழுங்கு செய்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும். ஆண்கள் சாரம், சேட்டு மேலங்கி தலைப்பாகை, தொப்பி முதலியவை் களை அணிந்து கொண்டு வழிபாட்டுக்குச்செல்லுதல் கூடாது. இதே போன்று பெண்கள் சேலை அணிந் தும், பாதம் வரை பாவாடை சட்டை அணிந்தும் செல்லுதல் வேண்டும். வழிபடச் செல்லுகின்ற நாம்' இறைவனின் திருவடிகளையே சிந்திக்க வேண்டும். வழிபாடு முடியும் வரையுமாவது எமது மனத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

## அடியார்களின் கவனத்திற்கு

வழிபாட்டிற்கு செல்லுகின்ற பொழுது வெறும் கையுடன் செல்லுதல் கூடாது. அர்ச்சனைப் பொருட் களைக் கொண்டு செல்லுதல் வேண்டும். வசதி இல்லையேல் பூக்கள் ஆவது கொண்டு செல்லுதல் வேண்டும். பலிபீடத்திற்கு முன்பாகத்தான் வீழ்ந்து வணங்குதல் வேண்டும். உள்ளே சென்று வீழ்ந்து கக்கூடாது.

ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.

கிழக்கு நோக்கிய சன்னிதானத்திலும், மேற்கு நோக்கிய சன்னிதானத்திலும், வடக்கு முகமாக வும், வடக்கு நோக்கிய சன்னிதானத்திலும் தெற்கு

நோக்கிய சந்நிதானத்திலும் கிழக்கு முகமாகவும் வீழ்ந்து வணங்குதல் வேண்டும். தீபாராதனை செய்யும் ஆசாரியர்களும் இம் முறையை அனுசரித்தே தீபாராதனைகளை நடத்தவேண்டும் அர்ச்சனை செய்விக்கின்ற அடியார்கள் பூசை முடிந்த பின்பு தான் அர்ச்சனை செய்வித்தல் வேண்டும்.

தேர் விழாவின் போது சுவாமி தேரில் ஆரோகணித்துத் திருவீதிவலம் வந்து இருப்பிடத்தை அடைந்த பின்பு தான் அடியார்கள் தங்களது அர்ச்சனைகளைச் செய்வித்துக் கொள்ளுதல் வேண்டும்.

## உற்ஸவகாலங்களில் அடியார்கள் செய்யத் தக்க திருத்தொண்டுகள்

சுவாமி தாங்குதல், குடை, தீவர்த்தி பிடித்தல் தீபம் ஏற்றுதல், மணி அடித்தல், சங்கநாதம் இசைத்தல், ஆலயத்தைக் கூட்டுதல், கழுவுதல், மெழுகுதல், திருவீதிகளுக்கு நீர் பரப்புதல், வாகனங்களைக் கொண்டு வந்து வைத்துக் கட்டுதல், வாழை கட்டுதல், மாவிலை, தோரணம் போடுதல், பூ, யாகத்திற்குத் தேவையான சமித்து வகைகள், தர்ப்பை, பால், இளநீர், முதலிய பொருட்களைத் தேடிக்கொண்டு வந்து கொடுத்தல், மாலை கட்டத் தெரிந்தவர்கள் மாலைகள் கட்டிக் கொடுத்தல், சுவாமி வீதிவலம் வரும் போது கூட்டமாகப் பஜனை செய்து வருதல், திருமுறைகளைப் பண்ணோடுஓதுதல், சிவனடியார்களுக்குத் திருவமுது கொடுத்தல், தாகசாந்தி செய்வித்தல் முதலியன.

## மஹோற்ஸவ ஆரம்பம்

பூரணை, அமாவாசைத் திதிகளைத் தீர்த்த தினமாகக் கொண்டு வேண்டிய நாட்களை முன்கூட்டி எடுத்து உற்ஸவத்தை ஆரம்பிக்கலாம். திதியை அந்தமாக நடைபெறும் உற்ஸவம் பட்ச உற்ஸவம் எனப்படும். கும்பாபிஷேகம் செய்த நட்சத்திரத்தைத் தீர்த்தத்தினமாகக் கொண்டு உற்ஸவத்தை ஆரம்பிக்கலாம். அல்லது அந்தந்த மாதம் தோறும் வரும் விசேட நட்சத்திரங்களைத் தீர்த்தத்தினமாகக் கொண்டு ஆரம்பிக்கலாம். இவைகள் நட்சத்திர உற்ஸவம் எனப்படும். உதாரணமாக சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரம் வைகாசி மாதம் விசாக நட்சத்திரம், ஆனி மாதம் உத்தர நட்சத்திரம், ஆடி மாதம் பூர நட்சத்திரம் இவ்வாறாக ஒவ்வொரு மாதங்களிலும் வரும் விஷேட நட்சத்திரங்களை அவதானிக்கவும்.

உற்ஸவநாட்களைக் கூறும் பொழுது நவதின மகோற்சவம் எனக் கூறப்படுகின்றது. அதாவது ஒன்பது இரவுகளைக் கொண்டு தான் மகாயாகத்தைத் தொடங்க வேண்டுமெனக் கூறப்படுகின்றது. அதற்கு மேற்பட்ட நாட்களை உற்ஸவ தினமாகக் கொள்ளுகின்ற பொழுது கூடுதலான நாட்களை விநாயகர், சுப்பிரமணியர் முதலிய பரிவார மூர்த்திகளுக்கும் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டுமென்றும், மிகுதியாக வருகின்ற ஒன்ப இரவு காலங்களிலுந் தான் மகாயாகத்தைத் தொடங்கி நடத்த வேண்டுமென்றும் ஆகமங்களில் கூறப்படுகின்றது.

## உற்ஸவ ஆரம்ப தினத்திற்கு முன்;

வாகனங்களைப் பழுது பார்த்து வர்ணம் தீட்டிப் புதுப்பித்துக் கொள்ளுதல் வேண்டும்.

கோயில் மண்டபச் சுவர்களுக்கும், மதில் சுவர்களுக்கும் வெள்ளை அடித்து மாணிக்கப் பட்டை தீட்டிக் கொள்ளுதல் வேண்டும்.

பந்தல்களை அமைக்கும் பொருட்டு சுப முகூர்த்த தினத்தில் பந்தல் கால முறைப்படி வழி பாடு செய்து ஈசான திசையில் அமைத்துக் கொண்டு அதன் பின் வேண்டிய இடங்களில் பந்தல்களைப் போட்டு வெள்ளை கட்டி அலங்கரித் துக்கொள்ளுதல் வேண்டும்.

திருவீதிகளைப் பெருக்கித் துப்பரவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

முக்கியமாக வெளிப் பிரகாரத்தில் மேற்குத் திசையில் வயிரவர் சாந்தி செய்வதற்காக (கிராம சாந்தி) ஒரு பந்தல் அமைத்துக் கொள்ளுதல் வேண் டும்.

தீர்த்தக்கிணற்றை இறைத்துத் துப்பரவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

குடை, தீவர்த்தி, திருவாடுதண்டு, பிள்ளைத் தண்டு முதலிய பொருட்களைப் பழுது பார்த்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

பூசைக்குத் தேவைப்படும் மணி, தீபவகை கள், குத்துவிளக்கு, தாம்பாளம் முதலிய பொருட்

களைத் துலக்கி அழகுபடுத்தி வைத்துக் கொள்ளு தல் வேண்டும்.

## உற்ஸவத்தில் பக்தர்களின் பங்கு

உற்சவத்தின் போது திருத்தொண்டுகளைச் செய்வதற்குத் தங்களை முன் கூட்டியே தயார் செய்து கொள்ளுதல் வேண்டும்.

உற்ஸவம் தொடங்கி முடிவுறும் வரைக்கும் விரதமாக இருத்தல் வேண்டும்.

இயன்ற வரை ஆசாரமாகவும், ஒழுக்கமாக வும், சுத்தமாகவும் இருந்து வரத் திட சங்கற்பம் பூண்டு கொள்ளுதல் வேண்டும்.

ஆலயத்தில் செய்து கொள்வேண்டிய தொண் டுகளில் ஏதாவது ஒன்றைத் தாம் நியதியாகச் செய்து வருதல் வேண்டும்.

ஆலயத்திற்குச் செல்லும் பொழுது அர்ச்சனைப் பொருட்கள், எண்ணெய், பால், இளநீர், பூ, முத லிய பொருட்களைக் கொண்டு செல்லுதல் வேண் டும். ஒன்றும் வசதி இல்லையேல் பூவையாவது கொண்டு செல்லுதல் வேண்டும். வெறும் கையு டன் செல்லுதல் கூடாது. ஆலயத்தினுள் மௌ னமாகவும், அமைதியாகவும், இருக்கப் பழகிக் கொள்ளுதல் வேண்டும். ஆலயத்திற்குச் செல்லு கின்ற பொழுது பாதரட்சை இட்டுக் கொண்டும், மேலங்கி அணிந்து கொண்டும், செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஆசாரியரும், கோவில் அதிகாரிகளும், ஊரவர்களும் உற்ஸவ புண்ணிய காலங்களிலே ஒரு காலப்போசனம் செய்து விதிப்படி விரதம் அநுஷ்டித்தல் வேண்டும். எண்ணெய் வைத்துக் கொள்ளுதல், ஆசௌச வீடுகளுக்குப் போதல், ஸ்திரிசம் போகம் முதலிய வற்றை நீக்கிக் கொள்ளுதல் வேண்டும். கொடியேற்றி உற்ஸவம் ஆரம்பித்து நிறைவு பெறும் வரையிலும் அந்தக் கிராமத்தி லுள்ளவர்கள் தங்கள் வீடுகளில் விவாகம் முதலிய மங்கள கர்மங்ககள் செய்தல் கூடாது. தூர இடங்களுக்குப் பிரயாணம் செய்தலும் விலக்கப்பட வேண்டும்.

## கொடி மரம்

இது திருவிழாக் காலங்களில் கொடியேற்றி பூசிக்கப்படுவதால் கொடிமரம் எனக் கூறப்படுகிறது. இந்த மரத்தினது உயரம் கர்ப்பக்கிருகத்தின் வான மட்டத்திலிருந்து வியாளவரி மட்டம் அல்லது திருவாசி மட்டம் அல்லது பத்ம மட்டம் அல்லது கலச மட்டம் ஆகிய ஒன்றிக்குச் சரியாக இருத்தல் வேண்டுமென ஆகமங்களில் கூறப்படுகின்றது. நாகமரம், தேக்கு, வில்வம், தேவ்தாரு, பலாசு, கருங்காலி ஆகிய மரங்களில் ஒன்றைத் தெரிந்து எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

வான மட்டம் தொடக்கம் பட்டியல் மட்டம் வரையிலான மரத்தைச் சதுரமாகச் செய்தல் வேண்டும்.

சதுரமாக உள்ள பாகம் பிரம்மபாகம் என்றும் அதற்கு மேலாக உள்ள பாகம் விஷ்ணு பாகம் உருத்திரபாகம் என்றும் கூறப்படும். மரத்தின் நுனிப்பாகத்தில் மூன்று சிலைப்பலகைகள் அமைத்து அதற்குமேலாக கலசம் அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். மரம்முழுவதையும்செம்பு, வெள்ளி, தங்கம் ஆகிய இவற்றில் ஒன்றினுல் மூடிக்கவசம் போட்டுக்கொள்ளுதல் வேண்டும். குடத்தில் மேலாக உள்ள சதுரப் பெட்டியிலே நான்கு திக்குகளிலும் அந்தந்த மூர்த்திகள் அமைத்தும், பெட்டியின் மேலாக நான்கு மூலைகளிலும் அந்த அந்த மூர்திக்குரிய வாகனங்களையும், கீழாக நான்கு மணிகளையும் அமைத்தும் கொள்ளுதல் வேண்டும். மேலாக உள்ள சிலை மூலஸ்தானத்தைப் பார்த்தபடி அமையவேண்டும். ஒருகொடி மரத்தைப்பார்த்தவுடனே மூலஸ்தானத்திலுள்ள மூர்த்தி என்ன என்பதை அறிந்து கொள்ளலாம். எப்படி என்ருல் பெட்டியின்மேலே அமைத்திருக்கும் வாகனங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். கொடிமரம் பதி என்று கூறப்படும். பதி என்பது இறைவன். ஆதலினுலே தான்அந்த இறைவனுக்குரிய வாகனம் தம்பத்தில் அமைக்கப்படுகிறது.

## கொடிச் சீலை

கொடிமரத்தினது உயரத்தின் இரண்டு மடங்கு நீளமாகக் கொடிச் சீலையை எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். சீலையை மூன்று பாகமாக்கி ஒரு பாகத்தின் நடுப்பகுதியிலே சீலையளவுஅகலத்திற்கு ஒரு சதுரத்தை எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். அந்தச் சதுரத்திலே சுவாமிக்குரிய வாகனத்தை எழுதிக் கொள்ளுதல் வேண்டும். அதன் மேல் அந்

தச் சுவாமிக்குரியதான அஸ்திர தேவரையும், அதற்குரிய திருவாசி, குடை, கொடிகள், சாமரைகள், பூரணகும்பம், பேரி, பாலிகை, தீபம், அட்டமங்கலம், ஆகிய பொருட்களை எழுதிக் கொள்ளுதல் வேண்டும். சீலையில் எழுதப்படும் வாகனங்கள் அந்தந்த மூர்திகளுக்கு அமைந்த வாகனமாக இருக்க வேண்டும். கொடிப்படத்தின் மத்தியில் எழுதப்படும் வாகனம் சீவான்மாவாகும்.அதன் முதுகின்மேல் எழுதப்படும் அஸ்திரதேவர் சீவான்மாக்கள் மலபரிபாகம் பெற்றுக் கொண்டதற்கு அடையாளமாகச் சக்திநிதிபாதம் அடைந்தமையக் குறிப்பதாகும். கொடிச்சீலையின் முடிச்சுடன் சேர்துக்கட்டப்பட்ட நூல்கயிறனது சீவான்மாவைப் பரமான்மாவிடம் [இறைவனிடம்] சேர்க்கும் திருவருட் சக்தியாகும். தருப்பைக்கயிறு பாசமாகும்.

கொடித்தம்பம் - இறைவன் - பரமான்மா - பதி
கொடிச்சீலை - ஆன்மா - சீவான்மா - பசு
தருப்பைக் கயிறு - பாசம்
நூல்கயிறு - திருவருட்சக்தி

## கொடியேற்று விழாவின் விளக்கம்

உற்ஸவ ஆரம்பத்திலே கொடியேற்ற வேண்டுமென்று ஆகமங்களிலே கூறப்படுகிறது. மும்மலத்திலே மூழ்கிக்கிடக்கின்ற ஆன்மா ஆசாரியாருடைய அருளாலும் தீட்சாக்கிரமத்திலைலும்பாசபந்தம் அற்றுச் சிவ ஞானத்தைப் பொருந்தி இறைவனின் திருவடியை அடையும் தன்மையைக் கொடியேற்று

விழா எடுத்துக்காட்டுகிறது. அதாவது: காரணாகமம் முதலிய சிவாகமங்களிலே கூறியவாறு கொடிமரம் பதியாகிய இறைவனையும், நூல்க்கயிறு இறைவனது திருவருட்சக்தியையும், கொடிச்சீலை ஆன்மாவையும் (பசு) தருப்பைக் கயிறு பாசத்தையும் குறிக்கும். ஆன்மா (பசு) பாசபந்தம் நீங்கிச்சிவபெருமானது திருவடியை அடையுமிடத்து திருவருட்சக்தி வாயிலாகவே அடைதல் வேண்டும். இவ்வாறே கொடியேற்று விழாவிலும் பசுவைக் குறிக்கும் கொடிச்சீலை திருவருட் சக்தியைக் குறிக்கும். நூல் கயிறு வழியாகச் சென்று ஸ்தம்பத்தில் ஆருதாரங்கள் ஆசனமாகக் கொண்டு அதன் மீதிருக்கும் இறைவனை அடைகின்றது. சீவான்மாவாகிய கொடிச்சீலை இறைவனாகிய பதியை அடைந்தவுடன் சீவான்மாவிற்கு ஆதாரமாக இருந்த திருவருட்சக்தி பதியோடு சேர்ந்து விடுகிறது. மறைக்கப்படுகிறது. பின் சீவான்மா வேறு பரமான்மா வேறு என்ற பேதம் இல்லாமல், அதாவது கொடிமரம் வேறு கொடிச்சீலை வேறு என்ற பேதமில்லாது இரண்டும் ஒன்றாக ஐக்கியப்படுகின்றது. அப்பொழுது பாசமாகிய தருப்பைக்கயிறும் சேர்ந்து விடுகிறது.

கடவுளின் திருவடியிலே ஆன்மா தங்கியிருப்பது போலப் பதியாக விளங்குகின்ற கொடிமரத்திலே ஆன்மாவாகிய(பசு) கொடிச்சீலை சென்று ஐக்கியமாக இருக்கின்றது. இப்பொழுது பதிவேறு பசுவேறு என்ற பேதமில்லாது போய் விடுகின்றது.

# கிரியை விளக்கம்

## விநாயகர் குரு வணக்கம்

எங்களுக்கெல்லாம் முழுமுதற் கடவுளாக இருப்பவரும், விக்கினங்களை யெல்லாம் தீர்ப்பவருமாகிய விநாயகப்பெருமானை நினைத்து மும்முறை சிரசிலே குட்டிக் குருவை உள்ளத்திலே நினைத்து வணங்குதல் வேண்டும்.

சங்கற்பம் - சங்கற்பமாவது ஆசாரியாரும் எசமானும் விபூதி அணிந்து பவித்திரம் தரித்துக் கொண்டு இன்ன சுபவேளையிலே இன்ன கர்மத்தைச் செய்யப் போகின்றேன் என மனதிலே சங்கற்பித்துக் கொள்வதாகும்.

## புண்ணியாக வாசனம்

விநாயக வழிபாடு செய்து பூரணகும்பத்திலே வருணதேவனை ஆவாகனம் பண்ணி வழிபட்டு ஆத்மசுத்திக்காகப் பஞ்ச கௌவிய பூசை வருண ஜபம் முதலிய கிரியைகளை நிறைவு செய்து கொண்டு பஞ்ச கௌவிய புண்ணியாக வாசன ஜலத்தினால் குருவானவர் தன்னையும், பூஜாத் திரவியங்களையும், ஸ்தலத்தையும் புரோட்சித்து சுத்தப் படுத்தல் வேண்டும்.

## அனுக்ஞை

ஒரு தாம்பாளத்திலே அரிசியைப் பரப்பி, தேங்காய், அரிசிமா, மஞ்சள்மா, மாவிலை, பூ, பத்திரம், தர்ப்பை, காசு வாழைப்பழம், வெற்றிலை பாக்கு, முதலிய பூசைக்குரிய பொருட்களை வைத்து

முறைப்படி அவற்றைப் பூசித்துப் பஞ்சப்பிரமஷடங்க மந்திரங்களைச் ஜபித்து வழிபாடு செய்த பின்பு ஷெ பொருட்களை மங்களவாத்தியம் முழங்கப் பிரதட்சண மாகக் கொண்டு சென்று விநாயகர் சந்நிதியை அடைந்து இப் பொருட்களை வைத்துப் பெருமானுக்கு விஷேட வழிபாடுகளைச் செய்து முடித்த பின்பு ஷெ பொருட்களைக் கைகளில் எடுத்துக் கொண்டு விநாயகப் பெருமானே! இத்தனை நாட்களைக் கொண்ட மகோற்ஸவத்தைச் செய்யப் போகின்றேன். அதற்குத் தேவரீரது அனுமதியைத் தந்து அருள் செய்தல் வேண்டுமென்று வேண்டிக் கொள்வதாகும்.

இவ்வாருக மூலமூர்த்தியிடத்திலும், உற்ஸவ மூர்த்தியிடத்திலும் அஸ்திர தேவரிடத்திலும் நந்தி தேவரிடத்திலும் சென்று சென்று அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

## கிராம சாந்தி

ஆலயத்தின் மேற்கு வீதியில் ஒரு மண்டபம் அமைத்து அதில் கும்பங்கள் வைத்து வைரவப் பெருமானை வழிபாடு செய்வதாகும். மகோற்ஸவம் நடைபெற இருக்கும் கிராமத்திலுள்ள அசுரர், இராட்சதர், பூதர், பசாசு, இவர்களால் நாங்கள் தொடங்க இருக்கும் பெருவிழாவுக்கு ஊறுபாடு நேராமல் இருப்பதற்காக அவர்களுக்குப் பலிகளைக் கொடுத்து மகிழ்வித்துக் கிராமத்திற்குக் காவலாக வுள்ள வயிரவப் பெருமானுக்கு விஷேட வழிபாடுகளைச் செய்து ஆகுதிகள், பலிகள் இவைகளைக்

கொடுத்துப் பெருமானிடத்திலே இந்தக் கிராம மக்களுக்கு ஒரு துன்பமும் நேராது காத்துரட்சிக்குமாறு வேண்டிக் கொள்வதாகும். மகோற்ஸவ காலங்களிலும், மகா கும்பாபிஷேக காலங்களிலும் கிராம சாந்தி செய்யாவிடின் அந்த இடத்திலே இலக்குமி வாசம் உண்டாகாது என்று காரணாகமத்திலே கூறப்படுகிறது.

## வாஸ்து சாந்தி

இது மகோற்ஸவம் நடைபெறும் ஆலயத்தையும், மண்டபங்களையும், திருவீதிகளையும், சுத்தப்படுத்தும் பொருட்டு செய்யப்படுவதாகும். இது இரண்டு வகைப்படும். ஒன்று மண்டூகம், மற்றது பரமசாயி பதம். தேவ ஆலயங்களுக்கு மண்டூக பதமும், தேவி ஆலயங்களுக்குப் பரமசாயி பதமும் போடவேண்டும் என்று ஆகமங்களில் கூறப்பட்டு இருக்கின்றது.

மண்டூகபதம் = $8\times8=$ (4

பரமசாயிபதம் = $9\times9=81$

பதபூசைகள், கும்பபூசை பலி முதலியவைகளை முடித்த பின்பு அக்கினி காரியம் செய்து ஓமம் பலி முடித்துப் பூரணாகுதி கொடுத்த பின்பு தருப்பை பலாசு, வைக்கோல் இவைகளைச் சேர்த்துப் புருஷாகிருதியாகக் கட்டிய உருவத்தைப் பூசித்து ஓம அக்கினியினால் அதன் சிரசை சுவாலிக்கச் செய்தல் வேண்டும். பின்பு பரிசாரகர் எரிகின்ற உருவத்தின் கால்களைப் பிடித்து இழுத்து மண்டபம், திரு

வீதிகள் ஆகிய இடங்களைச் சுத்தப்படுத்தல் வேண்டும். குருவானவர் கும்பதீர்த்தத்தினாலே புரோட்சித்தல் வேண்டும். பின்பு இழுத்துச் சென்ற உருவத்தையும், பலிகொடுத்த பூசினிக்காயையும், ஆலயத் திருவீதியின் ஈசான திக்கிலே போட்டுவிட்டு ஸ்நானம் செய்து கொள்ளுதல் வேண்டும்.

பலியை இழுத்துச் சென்ற பரிசாரகர் ஸ்நானம் செய்த பின்பு அவருக்குக் கோடி வஸ்திரம் கொடுத்து உபசரித்தல் வேண்டும். சுப்பிரமணியப் பெருமானுக்கும் பரமசாயிபத வாஸ்து சாந்தி செய்தல் வேண்டுமென்று சில ஆகமங்களில் கூறப்படுகின்றது.

## மிருத் சங்கிரகணம்

மிருத் சங்கிரகணம் - மண் எடுத்தல் எனப்படும் தீர்த்தக்கிணற்றுப்பக்கம் தர்ப்பை அடி, வில்வ மரத்தடி ஆகிய புனிதமான ஓர் இடத்திலே மண் எடுத்தல் வேண்டும். ஆசாரியார் மங்கள வாத்தியம் முழங்க அஸ்திரதேவரோடு சென்று அந்த இடத்திலே சங்கற்பம் விநாயகவழிபாடு, புண்ணியாக வாசனம் முதலிய கிரியைகளைச் செய்து முடித்த பின்பு, வாஸ்து பிரம்மாவையும், பூமி தேவியையும் வழிபாடு செய்து குந்தாலி (மண்வெட்டி) க்கு அபிஷேகம் ஆராதனைகளைச் செய்து வழிபட்டு மூன்று முறை மண்ணை வெட்டி எடுத்தல் வேண்டும். பின்பு அந்த இடத்தைச் சமப்படுத்திப் பாத்திகள் கட்டி நவதானியங்களை விதைத்து வழிபாடு செய்தல் வேண்டும். பின்பு ஆசாரியார் பிரதட்சணமாகச் சென்று யாகசாலையை அடைவார்.

## அங்குரார்பணம்

அங்குரார்ப்பணம் என்பது நவதானியங்களை முளைக்கப் போடுவது. யாகசாலையின் வாயு மூலையில் சந்திரனுக்கு ஒரு கும்பத்தை அமைத்துப் பூசித்து, அதைச் சுற்றி (12)பன்னிரெண்டு. பாலிகைகள் வைத்து அவற்றிலே முன்பே எடுத்துவந்த மண்ணை நிரப்பி நவதானியங்களைத் தூவிப் பால் தெளித்து வழிபாடு செய்வதாகும். இந்த வழிபாடு நாள் தோறும் காலை, மாலை இரண்டு நேரமும் செய்வதாகும். சந்திர கும்ப நீரினை ஊற்றிப் பயிர்களை வளர்த்து வருதல் வேண்டும். பயிர்கள் செழித்து வளர்ந்து வருவது மங்களத்தைக் குறிக்கும். கிருத்திகை ரோகிணி ஆகிய இரு சக்திகளோடு சேர்த்து சந்திரனுக்கு மூன்று கும்பங்கள் அமைத்து பூசிப்பதும் உண்டு.

## இரட்சாபந்தனம்

இரட்சாபந்தனமாவது: காவலுக்காகக் கட்டப்படும் காப்பாகும். இரட்சை - காவல், பந்தனம் கட்டுவது. ஒரு தாம்பாளத்தில் அரிசியைப் பரப்பி தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை வைத்து சுவர்ணம், வெள்ளி, செம்பு, ஆகிய உலோகங்களினால் செய்யப்பெற்ற காப்பினை அல்லது மஞ்சள் தோய்க்கப்பெற்ற நூலினைத் தேங்காயின் மேல் வைத்துப் பூசித்த பின்பு ஆசாரியர் தனது வலக் கரத்திலே அந்தக் காப்பினை அல்லது நூலைக் கட்டுவித்தல் வேண்டும். ஆசாரியார் தான் தொடங்கிய கருமம் நிறைவு பெறும் வரைக்கும் தன்னை எந்த வகையான ஆசௌசங்களும் பற்றாது இருக்கவேண்டுமென்பதற்காக இக்காப்பைக் கட்டிக்கொள்ளுகின்

ருர். ஆசாரியார் தான் இரட்சாபந்தனத்தை அணிந்து கொண்ட பின்பு விநாயகர்,மூலமூர்த்தி, உசற்ஸமூர்த்தி நந்தி பலிபீடம், முதலியன தேவர்களுக்கும் இரட்சாபந்தனத்தைக் கட்டுதல் வேண்டும்.

## பேரி தாடனம்

பேரி தாடனம் என்பது மேளம் அடித்தல். ஆசாரியார் முறைப்படி தானியங்களைப் பரப்பி அதன் மேல் மேளத்தை வைத்து அதில் சூரிய, சந்திரர்களையும், சப்த மாதர்களையும் பூசித்து வழிபாடு செய்து சிவாஸ்திரம் ஜபித்து மூன்று முறை மேளத்தை அடிப்பதாகும். இது தேவர்கள் வருவதற்காகவும், அசுரர்கள் அந்த இடத்தை விட்டு விலகுவதற்காகவும் பேரியை மும்முறை அடிப்பதாகும். அதன் பின் ஆசாரியர் வாத்திய காரரை அழைத்து வீபூதி, கொடுத்து பஞ்ச கௌவியம் அருந்தும் படி செய்து அவரைக் கொண்டு நாதரூபமான மேளத்திற்கு வழிபாடு செய்வித்த பின்பு மேளத்தை எடுத்து வாசிக்கும்படி கூறுவார். ஆசாரியர் கணபதி தாளத்தையும் விருஷப தாளத்தையும், திக்கு அதிபதிகளது தாளத்தையும், படிக்க தவிலை வாசித்தல் வேண்டும். அதன் மேல் மேள, வாத்திய காரருக்கு உபசாரமாக வஸ்திரம், தெட்சணை முதலியவைகளைக் கொடுத்தல் வேண்டும்.

## கும்பம் வைத்தல்

சப்த தானியங்களைப் பரப்பி அதன் மேல் மூலமூர்த்திக்கு ஸ்நபன கும்பங்களும், தம்பப் பிரதிஷ்டைக்கு ஸ்நபன கும்பங்களும், படப் பிரதிட்டைக்கு ஸ்நபன கும்பங்களும், படத்தி

லுள்ள அஸ்திர தேவருக்கு ஒரு கும்பமும், உற்ஸவ அஸ்திர தேவருக்கு ஒரு கும்பமும், பலி பீடத்திற்கு ஆறு கும்பங்களும், பரிசாகுதி செய்வதற்கு ஒரு சாந்தி கும்பமும் யாகத்திற்குத் தலைவரான யார்கேஸ்வர, யாகேஸ்வரிக்கு ஒவ்வொரு கும்பங்களும் சுத்தி புண்ணியாக வாசனத்திக்கு ஒரு கும்பமுகமாக அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அக்கினி காரியம் செய்வதற்குத் தேவையான எள்ளு, நவதானியம், நெற்பொரி, சமித்துக் கூட்டம் நெய், நூல் பந்து, கட்டைப்புல்லு, சிருக்கு சிருவம் முதலிய பொருட்களை ஆயத்தம் செய்து கொள்ளுதல் வேண்டும்.

## எசமானுக்குச் சங்கற்பம்

எசமானுக்குச் சங்கற்பம் செய்து பஞ்ச கௌவியம் அருந்தக் கொடுத்து இராட்சா பந்தனம் கட்டிக் கொள்ளுதல் வேண்டும்.

## யாகேஸ்வரர், யாகேஸ்வரி பூசை

யாகத்திற்குத் தலைவரான சிவபெருமானையும், உமாதேவியாரையும் கும்பங்களில் எழுந்தருளச் செய்து பூசித்து யான் நடாத்தப்போகும் இந்த யாகத்திற்கு காவலாகத்தேவரீர் இருத்தல் வேண்டும் என வேண்டுதல் செய்து அவரது வலது கரத்திலே ஞான கட்கம் என்று சொல்லப்படும் தர்ப்பையினாலே செய்யப் பெற்ற ஞானவாளைக் கொடுத்தல் வேண்டும். மூலமூர்த்திக்காக அமைத்த கும்பங்களிலே நடுக்கும்பத்தில் இறைவனையும், சக்தி கும்பத்திலே சக்தியையும் மற்றைய எட்டுக் கும்பங்களிலே அட்டவித்தியேஸ்வரர்களையும், பூசித்து வழிபாடு செய்து கொள்ளுதல் வேண்டும்.

## ஸ்தம்பப் பிரதிஷ்டை (கும்பபூஜை)

இதற்காக அமைத்த கும்பங்களிலே நடுவில் இறைவனையும், சக்தியையும், எட்டுக் கும்பங்களிலே, அட்டவித்தியேஸ்வரர்களையும் பூசித்து வழிபாடு செய்து கொள்ளுதல் வேண்டும்.

## படப் பிரதிஷ்டை (கும்பபூஜை)

இதற்காக அமைத்த கும்பங்களிலே நடுவிலே விருஷபத்தையும், சக்தியையும் எட்டுக் கும்பங்களிலே அட்ட வித்தியேஸ்வரர்களையும் பூசித்து வழிபாடு செய்து கொள்ளுதல் வேண்டும்.

## அஸ்திர தேவப் பிரதிஷ்டை (கும்பபூஜை)

படத்தில் எழுந்தருளியுள்ள அஸ்திரதேவருக்காக அமைக்கப்பட்ட கும்பத்திலே அஸ்திர தேவரைப் பூசித்து வழிபாடு செய்து கொள்ளுதல் வேண்டும்.

## உற்ஸவ அஸ்திரதேவர் பலிபீட பிரதிஷ்டை (கும்பபூஜை)

ஒரு கும்பத்திலே அஸ்திரதேவரையும், ஆறு கும்பங்களிலே பலீபீட தேவர்களையும், பூசித்து வழிபாடு செய்து கொள்ளுதல் வேண்டும். வழிபாடுகள், ஜபங்கள் முடிந்த பின்பு அக்கினி காரியம் செய்தல் வேண்டும்.

## ஸ்பரி சாகுதி

அக்கினி காரியம் செய்து நாடி சாந்தானம் செய்து முறைப்படி ஆகுதிகள் கொடுத்து பின்பு கொடிப்படத்திற்குத் தத்துவ பூசைசெய்து அக்கினிக்கும், படப்பிரதிஷ்டா கும்பத்திற்கும், படத்

திற்கும், நாடீ சந்தானம் செய்து சாந்தி கும்பத்தைப் பூசித்து பின் அக்கினியில் மூர்த்தி மூர்த்தீஸ்வரர்களைப் பூசித்து ஸ்பரிசாகுதி செய்து பூரணாகுதி செய்யவும். ஸ்பரிசாகுதி என்பது தொட்டுச் செய்வது. பூரணாகுதி செய்கின்றபொழுது "ஸ்வா" என அக்கினியிலும், எஞ்சிய நெய்யைக் கொண்டுசென்று "ஹா" என படத்திலும் விடுதல்வேண்டும். பின்பு மகாபூரணாகுதி கொடுத்தபின் அந்தந்தமூர்த்திகளை அந்தந்தக் கும்பங்களில் சேர்த்துப் பின் பலியிட்டுக் கிரியைகளை நிறைவு படுத்தி, இரட்சை எடுத்து கும்பங்களுக்கும் படத்திற்கும் சாத்தி நீரரஞ்சனம் செய்தல் வேண்டும். பின்பு விஷேடபூசை செய்து பஞ்சாராத்தி காட்டியபின் எசமானுக்கு ரட்சைப் பிரசாதம் கொடுத்தல் வேண்டும். பின்னர் மூலமூர்த்தி கும்பத்தைப் பிரதட்சணமாகக் கொண்டு வந்து மூலமூர்த்திக்கு அபிஷேகம் செய்து பஞ்சாராத்தி காட்ட வேண்டும். மூலமூர்த்திக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விஷேட வழிபாடுகள் முடித்த பின்பு வசந்த மண்டபப் பூசை நிகழும். பூசை முடிவில் வேத, ஸ்தோத்திர, தேவார, ஆசீர்வாத பாராயணங்களுடன் தீபாராதனை இடம்பெறும். தமிழ் வேதமாகிய திருமுறை ஓதும் பொழுது பஞ்சபுராணங்களும் ஓதப் படல் வேண்டும்.

## கொடிப் படப் பிரதட்சணம்

கொடிப் படத்திற்குப் பஞ்சாராத்தி காட்டிய பின் அஸ்திர தேவருடன் கொடிச் சீலையை மங்கள வாத்தியம் முழங்க வீதி பிரதட்சணமாகக் கொண்டு வந்து ஸ்தம்ப சமீபத்தில் வைத்தல் வேண்டும்.

## உற்சவ மூர்த்தி புறப்பாடு

உற்சஸவ மூர்த்திக்குப் பஞ்சாராத்தி காட்டி சர்வ மங்கள வாத்தியம் முழங்க மூர்த்திக்குரிய வாகனத்தில் சுவாமியை எழுந்தருளச் செய்து பிர தட்சணமாகக் கொண்டு வந்து தம்பத்திற்கு நேரே வடக்கு முகமாக நிறுத்தி சுவாமிக்குத் தீபாராதனை செய்தல் வேண்டும். பின்பு ஸ்தம்ப சமீபத்தில் சங் கல்பம், புண்ணியாகவாசனம் செய்து முடித்தபின்பு மூல விருஷபத்திற்கு விஷேட அபிஷேக ஆராதனை கள், செய்தல் வேண்டும்.

## ஸ்தம்ப பிரதிஷ்டை

தம்பத்திற்குச் சாந்தி கும்ப அபிஷேகம் செய்து இரட்சாபந்தனம் கட்டி பிரதிஷ்டைக்காக முன்னரே வைத்துப் பூசித்த கும்பங்களைக் கொண்டு வந்து அபிஷேகம் செய்து விஷேட பூசை செய்தல் வேண்டும். இது தம்பத்திலே இறைவனை எழுந்தரு ளச் செய்வதற்காகச் செய்யப்படுவது.

## படப் பிரதிட்டை

கொடிப் படத்தை தம்பத்தின் பாதத்திலே வைத்துப் பூசித்து விருஷபப் பிரதிட்டைக்குரிய கும்பங்களைக் கொண்டு வந்து அபிஷேகம் செய்து பின் விருஷபத்தின் மேலுள்ள அஸ்திர தேவருக்கு அஸ்திர கும்பத்தை அபிஷேகம் செய்து, தீபாரா தனை செய்து கொள்ளுதல் வேண்டும். பின்னர் இரட்சாபந்தனம் செய்து கொள்ளுதல் வேண்டும்.

## ஸமஸ்த தேவதா ஆவாகனம்

சகல தேவர்களையும் அழைத்து இன்ன நகரத்திலே இருக்கின்ற ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் சுவாமிக்கு இத்தனை நாட்களைக் கொண்ட மகோற்ஸவம் நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளது. இந்த உற்ஸவத்திலே நீங்களும் உங்களது சகல பரிவாரங்களுடன் வந்து இந்தத் துவசத் தம்பத்திலே சான்னித்தியமாக இருத்தல் வேண்டுமென்று வேண்டிக் கொள்ளவும்.

## கணபதி தாளம்

விநாயகப் பெருமானுக்கு விஷேட வழிபாடுகளைச் செய்து அவருக்குகந்ததாகியஸ்தோத்திரத்தைத் தாளத்துடன் பாடி பண்ணுடன் தேவாரம் ஓதி ராகம் வாசித்தல் வேண்டும் இது விநாயக் கடவுளின் திருவருளைப் பெற்றுக் கொள்வதற்க்காகச் செய்யப்படுவது.

## விருஷப தாளம்

இடப தேவரைப் பூசித்து, அவருக்குரியதான தாளம், பண், இராகம் இவைகளை ஒநிவ்ழிபாடுசெய்தல் வேண்டும். இது இடப தேவரின் திருவருளைப் பெற்றுக் கொள்வதற்காகச் செய்யப்படுவது.

## தான வகை

இந்த விழா மங்கள கரமாக நிறைவு பெறும் பொருட்டு நவக்கிரக தேவர்களை வேண்டுதல் செய்து நவக்கிரக தானத்தையும், யாத்திரா தானத்தையும், முகூர்த்தப் பிரீதியின் பொருட்டு முகூர்த்த

தானத்தினையும், செய்தல் வேண்டும். தானம் கொடுப்பதால் கிரக தேவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

## கொடி யேற்றம்

குறித்த சுபமுகூர்த்தத்திலே மணிகள் ஒலிக்க அந்தணர் வேதம் ஓதி ஆசீர் வதிக்கச் சர்வ மங்கள வாத்தியங்களும் முழங்க, தேங்காய்யுடைத்து விநாயகப் பெருமானை வேண்டுதல் செய்து கொண்டு, கொடியை ஏற்றுதல் வேண்டும். கொடி மேலாகச் சென்று இருப்பிடத்தை அடைந்த பின்பு சீலையை வலப்பக்கமாக முறுக்கிப் பிரதட்சணமாக மூன்று முறை சுற்றி மேற்குப் பக்கத்தில் சுற்று முடியும்படி கட்டிச் சீலையில் முடி போட்டு மாவிலை கூர்ச்சம் வைத்து தர்ப்பைக் கயிற்றினல் சுற்றிக்கட்டவும். முடிச்சு சுவமியைப் பார்த்தபடி இருத்தல் வேண்டும்.

தர்ப்பைக் கயிற்றை மறைத்துப் பட்டுவஸ்திர கட்டி, உத்தரியம் சாத்தி அலங்கரித்துக் கொள்ளவும். தற்பைக் கயிற்றுடன் எட்டுத் திக்குகளிலும் கூர்ச்சங்கள், தர்ப்பைகள் பட்டு வஸ்திரங்கள் வைத்து அலங்கரிப்பதும் உண்டு.

## தம்ப பூஜை

தம்பத்திலே இறைவனையும் இறைவியையும் எழுந்தருளச் செய்து பூசை, அபிஷேகம், பலி, விசேட பூசை முதலிய கிரியைகளை முறைப்படி விரிவாக நடத்துதல் வேண்டும். இந்த வழிபாடு நாள்தோறும் காலையிலும் மாலையிலும் இடம்பெறும்.

தம்பபூசை முடிவில் அஸ்திரதேவதாவாகனமும் தீபாராதனையும் செய்தல்வேண்டும். மங்கள ஆசீர் வாதம் முடித்த பின்பு சிவாசாரியர் எஜமானுக் கும் அடியவர்களுக்கும் அட்சதைதூவி ஆசீர்வதிப் பார். பின்னர் சுவாமி உள்வீதி திருவுலா நடை பெறும்.

## நவ சந்தி பூசை

சுவாமி திருக்கோபுர வாசலில் வந்தவுடனே தீபாராதனை செய்து சமுகம் (கட்டியம்) கூறப்படும். அதாவது "சுவாமி! திருவீதி வலம்வரப்போகின் ருர்; தேவர்களே! நீங்கள் எல்லோரும் சமுகமாக வந்து விழாவில் கலந்து கொள்ளுங்கள்" என்று வேண்டிக்கொள்வதாகும். பின்பு மத்தியில் பிரம தேவனை வாகனம் சத்தி, புத்திர பரிவாரங்களு டன் வரும்படி அழைத்து விஷேட வழிபாடுக ளைச் செய்து பலியிட்டு அவர்களுக்கு உகந்ததா கிய தாளம்,தேவாரம், பண், இராகம் முதலியவை களை ஓதி வழிபாடு செய்தல் வேண்டும்.

இவ்வாருக ஒவ்வொரு திக்குகளிலும் அந்த அந்தத் திக்குப் பாலர்களை அழைத்துப் பலியிட்டு வழிபாடு செய்துகொள்ளுதல் வேண்டும். உற்ஸவம் முடியும்வரையிலும் காலையிலும் மாலையிலும் பலி யிட்டு வழிபாடு செய்துகொள்ளுதல் வேண்டும். திக்குகளில் சுவாமியை நேராகவும், விதிச் சுற்று களிலே (மூலைகளில்) திருப்பியும், சுவாமியை நிறுத்திப் பலியிட்டு வழிபடல் வேண்டும்.

வடகிழக்குத் திசையில் சுவாமியைத் திருப்பி நிறுத்தி வழிபாடுகளைச் செய்து அந்த இடத்தில் விசேடமாகப் பூதநாட்டியம் செய்வித்தல்வேண்டும். (அதாவது மேளகாரர் தவிலைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு, சுவாமியை மூன்று முறை ஒற்றைக்காலிலுல் பிரதட்சணமாக வலம் வந்து தவிலைவாசிப்பது.) இது பூதநாட்டியம் என்று கூறப்படும். வழிபாடுமுடிந்தவுடன் மேளகாரருக்கு வஸ்திரம் தெட்சணை கொடுத்து உபசரித்தல் வேண்டும்.

## ஈசான திசை வழிபாடு

ஈசானதிசைக்கு அதிபதியானவன் இறைவனது பூரண திருவருளையும், வடிவத்தையும், பெற்றுக் கொண்டவன். ஆதலினாலே ஈசானதிசையில் இறைவன் வரும் பொழுது விஷேட வழிபாடுகளைச் செய்தல் வேண்டும். அந்த இடத்தில் சுவாமிக்கு நிவேதித்து நீராஞ்சனம் செய்து திருமுறை ஓதுதல் வேண்டும்.

இந்தக் கிரியை நாள் தோறும் காலையிலும் மாலையிலும் செய்து வருதல் வேண்டும்.

## பாத தீர்த்தம் கொடுத்தல்

சுவாமி வாசலில் வந்தவுடன் தொண்டர்கள் மும்முறை சுற்றி வந்து தங்கள் வழிபாட்டை முடித்த பின்பு ஆசாரியார் சர்வவாத்தியம் முழங்க பூரண கும்பத்தைக் கொண்டு வந்து சுவாமியின் திருவடி

களை பாவனையாக விளக்குவார்; சுவாமியின் திருப் பாதங்களைக் கழுவுவதினாலே இதற்குப் பாத தீர்த்தம் எனப் பெயர் வந்தது. இந்த இடத்தில் பாத தீர்த்தம் கொடுக்குமுன் சுவாமிக்குப் பட்டுச் சாத்துதலும் இடம்பெறும்.

## சித்தே சொல்லுதல்

சுவாமியின் திருவீதி உலாவுக்கு வரும்படியாக அழைத்த தேவர்கள் எல்லாரையும் "திருவீதி உலா நிறைவு பெற்றுவிட்டது தேவர்காள்! நீங்கள் உங்களது இருப்பிடங்களுக்குச் சென்று வாருங்கள்" என்று வேண்டிக் கொள்வது.

## சுவாமி வசந்தமண்டபத்துக்கு எழுந்தருளுதல்

வாகனத்தை இறக்கி சுவாமியின் கச்சினை அவிழ்த்து வசந்த மண்டபத்துக்கு எழுந்தருளச் செய்தல் வேண்டும். பின்பு வசந்த மண்டபத்தில் சுவாமிக்கு நைவேத்தியம் வைத்து நீராஞ்சனம் செய்தல் வேண்டும். அதன் மேல் வயிரவப் பெருமானின் பூசையைச் செய்தல் வேண்டும். அதன் பின்பு சண்டேஸ்வரப் பெருமானுக்குப் பூசை செய்து பூஜாபலத்தைத் தந்தருளுமாறு வேண்டிக் கொள்ளுதல் வேண்டும். அதன் பின்பு உபயகாரருக்கு பூஜாபலத்தைக் கொடுத்து விபூதிப் பிரசாதம் வழங்கி மாலை அணிவித்து அவரைக் கொண்டு சுவாமியைப் பிரதட்சண நமஸ்காரம் செய்விக்க வேண்டும். அதன் பின்பு அடியார்களுக்குப் பிரசாதம் கொடுத்தல் வேண்டும்.

## இரவு உற்ஸவம்

வழமை போன்று இரவு மூலஸ்தானப் பூசை நிகழும்

### மகா யாக பூசை :

ஈசான திசையில் அமைந்துள்ள யாகசாலையில் முறைப்படி கும்பங்களை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

சூரியன், சந்திரன், கலைகள் துவார பாலர்கள், திக்குப் பாலகர்கள், வாஸ்து பிரமா, மகாலட்சுமி, விநாயகர், சப்த குரு, யாகேஸ்வரி, யாகேஸ்வரர் இவர்களுக்கு யாகத்தைச் சுற்றிவர அந்த அந்த இடங்களிலே கும்பங்களை அமைத்தும், வேதிகையில் பிரதான மூர்த்தி, வர்த்தனி, அஷ்ட வித்தியேசுரர் இவர்களுக்குக் கும்பங்களை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். இவைகளுக்கெல்லாம் முறைப்படி பூசைகள் செய்து கொண்டு குண்டத்திலே அக்கினியைப் பிரதிட்டை செய்து பூசித்து விசேட வழிபாடுகள் செய்து கொள்ளுதல் வேண்டும்.

## ஸ்தம்ப பூசை

ஆசாரியார் யாக பூசை முடித்துக்கொண்டு மங்கள வாத்தியம் முழங்க அஸ்திர தேவருடன் புறப்பட்டு ஸ்தம்பசமீபத்திற்குச்சென்றுஸ்தம்பபூசைசெய்

தல் வேண்டும். ஆசாரியர் முதலில் சங்கல்பம் செய்து கொண்டு புண்ணியாக பஞ்ச கௌவிய ஜலத்தினுற் புரோட்சித்து ஆத்ம பூசை செய்து கொண்டு, ஸ்தம்பத்திலே இறைவனை எழுந்தருளச் செய்து பஞ்சாள பூசை, அபிஷேகம், பலி விசேட பூசை முதலியவைகளை முறைப்படி செய்தல் வேண்டும். அதன் மேல் அஸ்திர தேவருடன் சென்று நவ சந்திகளிலும் பூசை, பலி முதலியவைகளைச் செய்தல் வேண்டும்.

## வசந்தமண்டபப் பூசை:

பின்பு வசந்த மண்டபத்தில் விசேட பூசை வழிபாடுகளைச் செய்து சுவாமியை எழுந்தருளச் செய்தல் வேண்டும்.

## யாக தரிசனம்

பிரதட்சணமாகச் சுவாமி யாக வாசலில் வந்தவுடன் யாகத்தில் உள்ள இறைவனைப் பூசித்து ஆகுதிகள் செய்து பூரணுகுதி கொடுத்துப் பலியிட்டு இரட்சை எடுத்துக் கும்ப மூர்த்திக்குச் சாத்தி விசேட பூசை நடத்தவும்:

பின்பு யாகதரிசனுர்த்தம் சுவாமிக்கு லாயபுஸ்பாஞ்சலி சமர்ப்பித்து இரட்சை சாத்தி விசேடபூசை நடத்தி, நீராஞ்சனம் காட்டி வேத, ஸ்தோத்திரம், திராவிட தோத்திரம், பாராயணம் செய்து வழிபாட்டை நிறைவு செய்து கொள்ளவும். இந்த இடத்தில் விசேட பூசை முடிவில் லாய புஸ்பாஞ்சலி சமர்ப்பிக்கின்ற ஒரு முறையும் உண்டு.

புஸ்பாஞ்சலி விஷேட பூசை முடிவில் செய்தல் வேண்டுமென்று ஆகமங்களில் கூறப்படுகின்றன. பின்பு சுவாமி கோபுர வாசலில் வந்தவுடன் வாகனங்களில் எழுந்தருளச் செய்து நீராஞ்சனம் காட்டிச் சமுகம் சொல்லப்படும். சுவாமி பிரதட்சணமாக ஈசானத்தை அடைந்தவுடன் திருமுறை ஓதி விஷேட வழிபாடு நடைபெறும். திரும்பவும் சுவாமி கோபுரவாசலில் வந்தவுடன் பட்டுச்சாத்தி பாததீர்த்தம் கொடுத்து நீராஞ்சனம் காட்டி சித்தே சொல்லி வழிபாட்டைநிறைவு செய்து கொள்ளவும்.

பின்பு வசந்த மண்டபத்திற்கு சுவாமியை எழுந்தருளச் செய்து நீராஞ்சனம் காட்டவும். பின்பு வ்யிரவ சுவாமியினுடைய வழிபாட்டை முடித்து சண்டேசுரப் பெருமானுக்கு வழிபாடு செய்து அவரிடத்தில் பூஜாபலனைத் தந்தருளுமாறு வேண்டுதல் செய்து கொள்ளவும். இவ்வாருகத் தினசரி காலையிலும், மாலையிலும் உற்ஸவம் நடத்துநல் வேண்டும்.

## சந்தி யாவாஹன விளக்கம்

சந்தியாவாஹனம் என்பது திசைகள் தோறும் திக்குப்பாலகர்களை ஆலயத்தின் அந்த அந்தத் திசைகளிலே உற்ஸவம் நிறைவுபெறும் வரையிலும் சானித்தியமாக எழுந்தருளியிருக்கச் செய்தல் என்பது பொருள் மூலமூர்த்திக்கு அபிமுகமாக கோபுர வாசலிலே பிரமதேவரையும், கிழக்குமுதல் ஈசாநம் ஈருக எட்டுத்திக்குப் பாலகர்களையும் பெருமானுக்கு விழாத் தொடங்கி நிறைவு பெறும் வரையிலும்

உங்களதுபரிவாரங்களோடுஎழுந்தருளிவந்துகாவல் புரியும் படி வேண்டுதல் செய்து பலியிட்டு வேண்டிக்கொள்ளும் ஒருவழிபாடாகும். திக்குப் பாலகர்களை வரும்படி வேண்டிக்கொள்ளும் முதற் தினத்திலும், பின்பு உற்ஸவம் நிறைவுறும் கடைசித் தினத்திலும் அவரவர்களுக்குரிய சிறப்பு இயல்புகள் தாளம் வேதம், பண், வாத்தியம், இராகம், என்பன, படித்து அவர்களை மகிழ்வித்தல் வேண்டும்.

இந்தக் கிரியை கொடியேற்றி முடிந்து சுவாமி புறப்பாடாகி வருகின்றபொழுது செய்யப்பட வேண்டும். சிலஇடங்களில் மகாயாகம் தொடங்கிய பின்புதான் செய்து வருகின்றார்கள். அது தவறானதாகும். மகா யாக பூசையில் திக்குப் பாலகர்களை வழிபாடுசெய்வது யாகத்தை இரட்சித்தல்(காவலின்) பொருட்டாகும். இரண்டாம் பிரகாரத்தில் திக்குப் பாலகர்களை வழிபாடுசெய்து சுவாமியின் திருவீதி உலாவிலே பங்கு கொண்டு காவலாக இருப்பதற்காகும். ஆதலால் சுவாமி திருவீதி உலாவரும்பொழுதிலேயே சந்தியாவாகனத்தையும் செய்து கொள்ளுதல் வேண்டும். பகலில் சந்தியாவாஹனத்தைச் செய்யாது யாகாரம்பமானபின்பு இரவு செய்வோமானால். திக்குப்பாலகர்களுக்குக் கொடுக்கும் பலி பூசைகளிலே ஒருகால பலி குறைவு ஏற்படும். ஆதலினால் பகலிலேயே சந்தியாவாஹனத்தைச் செய்துகொள்ள வேண்டும். மேலும், திக்குப்பாலகர்களை அந்த அந்தத் திக்குகளிலேதான் வழிபாடு செய்துகொள்ளுதல் வேண்டும்.

## யாக சாலை விளக்கம்

மகோற்ஸவத்திலே பிரதானமான அம்சமாக் விளங்குவது மகாயாகமாகும். ஆலயத்தின் முத லாவது வீதியிலே வடகிழக்குத் திசையிலே மேற்கு வாசலாக அமைக்கப்படுவது யாகசாலை. இடவ சதி குறைவான ஆலயங்களிலே வசந்தமண்டப மேற்குச் சுவரோடு சேர்த்துக் கட்டி மேற்கு வாச லாக விட்டிருக்கின்றார்கள். மகோற்ஸவங்களிலே அமைக்கப்படும் யாகசாலை மேற்கு வாசலாகத் தான் இருக்க வேண்டு மென்பது தான் முறை. யாகசாலை வாசல் மூன்று பதங்களும், பக்கங்கள் ஐந்து, ஐந்து பதங்கள் கொண்டதாகவும், மொத் தம் பதின்மூன்று பதங்கள் கொண்டதாக அமைத் தல்உத்தமம். வாசல் மூன்று பதங்களும், பக்கங்கள் நான்கு நான்கு பதங்கள் கொண்டு மொத்தம் பதினொரு பதங்களைக் கொண்டு அமைத்தல் மத் திமம். இவ்வாறு ஆகமங்களிலே கூறப்படுகின்றது.

இந்த யாகசாலையிலே நடுவில் மூன்றுபதச் சது ரத்திலே ஒரு பிரதான வேதிகையும், சுற்றவர பரிவார கும்பங்கள் அமைப்பதற்கு வேதிகைகளும் வடகிழக்கு மூலையில் யாகேஸ்வரன் யாகேஸ்வரி வைப்பதற்கும், வடமேற்கு மூலையில் சந்திரகும்பம் வைப்பதற்கும், தென்மேற்கு மூலையிலே பஞ்ச கௌவியம் அமைப்பதற்கும் ஒவ்வோரு மேடைக ளைக் கட்டிக் கொள்ள வேண்டும். பிரதான வேதி கைக்கு முன்பாக மேற்குப் பக்கத்திலே ஒரு குண் டத்தையும் அமைத்துக் கொள்ளுதல்வேண்டும். குண்டம் அமைக்கும் பொழுது அந்த அந்த மூர்த்தி

களுக்குச் சொல்லப்பட்ட குண்டத்தைத் தான் அமைத்துக் கொள்ள வேண்டும். குண்டங்கள் அமைக்க வேண்டிய முறைகள் எமது வெளியீடான "முத்திராலட்சண விதி" என்னும் நூலிலே விரிவாகக் காணலாம். இவ்வாறு அமைக்கப்பட்ட யாகசாலையில் சூரியன், சந்திரன், நான்கு கலைகள் எட்டுத் துவார பாலர்கள், பத்துத் திக்குப் பாலகர்கள் வாஸ்துபிரமா, மகாலட்சுமி, விநாயகர் சப்தகுரு, யாகேஸ்வரன், யாகேஸ்வரி, இவர்களுக்கு கும்பங்கள் அமைத்து முறைப்படி பூசிக்கவும். பிரதானவேதிகையிலே மூலமூர்த்திக்கும் சக்திக்கும் அட்டவித்தியேசுரருக்கும், விஷேடமாக கும்பங்கள் அமைத்துப் பூசிக்கவும், குண்டத்திலே சமஸ்காரங்கள் செய்து அக்கினி தேவனைப் பிரதிட்டை செய்து பூசித்து பூரணாகுதி செய்க. பின்பு நாடீசந்தானம் செய்து அக்கினியிலே இறைவனையும் இறைவியையும் முறைப்படி வழிபாடுகள் செய்து ஆகுதிகள் கொடுக்கவும்.

பின்பு சுவாமி யாகவாசலில் வந்தவுடனே விசேட பூரணாகுதி செய்து ரட்சை எடுத்து கும்பமூர்த்திக்குச் சாத்தி விஷேட பூசை செய்குக. பின்பு சுவாமிக்கு ரட்சை சாத்தி விசேட வழிபாடுகள் செய்குக. பூசை முடிவில் புஷ்பாஞ்சலி செய்து வேதஸ்தோத்திர, திருமுறைப் பாராயணம் செய்து வழிபாடுகளை நிறைவு செய்து கொண்டு எசமானுக்கும் பக்த ஜனங்களுக்கும் ரட்சைப் பிரசாதம் கொடுக்கவும்.

## வசந்தோற்ஸவம்

ஆருவது விழாவிலே வசந்தோற்ஸவம் செய்க.

## மிருகயாத்திரை

எட்டாவது தினத்திலே விஷேட விழாவாக (மிருகயாத்திரை) வேட்டைத் திருவிழாவைச் செய்க.

## கிருஷ்ண கந்தம்

திரிபுர சங்காரத்து உண்மையை உணர்த்தும் பொருட்டுக் கிருஷ்ண கந்தம் சாத்தப்படுவதாம். இது ஒன்பதாவது தினத்திலே செய்யப்படும்.

## தேர்த் திருவிழா

இறைவன் சூரிய சந்திரர்களைச் சில்லாகவும், சரம் அசரம் ஆகிய பொருட்கள் ஒவ்வோரு உறுப்புக்களாகவும், நான்கு வேதங்கள் குதிரைகளாகவும், அமைந்த தேரில் மேருவை வில்லாகவும், விஷ்ணுவை அம்பாகவும், அக்கினியை அம்பின் கூராகவும் கொண்டு எழுந்தருளிப் பிரமதேவனுகிய சாரதி பிரணவமாகிய சவுக்குக் கொண்டு செலுத்தத் திரிபுரத்தசுரர்களை தமது திருப்புன் முறுவலால் எரித்தருளினுர். திரிபுர சங்காரத்து உண்மைக் காட்சியை உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையுங் கெடுத்தற்காக இரதோற்ஸவம் நடாத்தப்படுகின்றது.

## சூர்ணோற்சவம்

தனு, கரண, புவன, போகங்கள் நான், எனது என்னும் செருக்கை எழுப்புவன. அவைகளைத் திருவருட் சக்தியால் இடித்துச் சுத்த சூரணமாக்கி இறைவனிடத்தில் ஒப்புவிக்க அவர் திரோபவ் கிருத்தியம் செய்தருளுவார். அப்பொழுது ஆன்மா இருவகைப்பற்று மற்றுத் தன் செயலற்றுச் சிவன் செயலாய் நிற்கும். இதுதான் சூர்ணோற்ஸவத்தின் தத்துவமாகும். சூர்ணோற்சவக் கிரியையில் சங்கற்பம் புண்ணியாக வாசனம் முடித்துப் பேரிதாடனம் செய்தல் வேண்டும். பின்பு உரல் உலக்கைகளில் பிருதிவியையும், மகாமேருபர்வதத்தையும் பூசித்து வழிபாடுகள் செய்து உரலினுள்ளே மஞ்சள், அறுகு இவைகளைப் போட்டு நல்லெண்ணெய் விட்டு இடிக்கவும். இடிக்கும் பொழுது பத மந்திரங்களும், திருப்பொற் சுண்ணப் பதிகங்களும் ஓதுதல் வேண்டும். வழிபாடுகள் நிறைவு பெற்ற பின்பு சுண்ணப் பொடியை எடுத்து அஸ்திர தேவருக்கு அபிஷகம் செய்து கொள்ளவும்.

## தீர்த்தத் திருவிழா

தீர்த்தத் தினத்தை நிச்சயித்துக் கொண்டு துவஜாரோகணம் செய்தல் வேண்டும். தீர்த்த தினம் பூரணை, அமாவாசை கும்பாபிஷேகம் செய்த நட்சத்திரம் மாதங்களில் வரும் விசேஷ நட்சத்திரம் இவைகளில் ஒன்றைத் தெரிந்து எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். தீர்த்தோற்ஸவத்தைக் காலையில் செய்வது உத்தமம். மத்தியானத்தில்

செய்வது மத்திமம். அதற்கு மேல் செய்வது அதர்மம் தீர்த்தோற்ஸவம் உள்வீதியில் செய்தல் கூடாது.

## யாக கும்பாபிஷேகம்

யாகத்தினுடைய நிறைவின் பொருட்டும் உலகங்களை இரட்சித்தற் பொருட்டும், யாககும்பாபிஷேகத்தைச் சிறப்பாகச் செய்தல் வேண்டும். சுவாமியை யாகவாசலில் கொண்டு வந்து நிறுத்தி யாகத்திலே பெருமானுக்கு வழிபாடுகளைச் செய்து மகாபூரணாகுதி செய்யவும். பின்பு இரட்சை எடுத்துச் சாத்தி விஷேட பூசை செய்யவும். பின்பு சுவாமிக்கு இரட்சை சாத்தி விஷேட வழிபாடுகளைச் செய்தபின் சுவாமியை வசந்த மண்டபத்தில் கொண்டு போய் வைத்து தீபாராதனை செய்யவும். பின்னர் யாக மண்டபத்துக்கு வந்து பரிசாரகனை வருவித்து வீபூதி கொடுத்து உட்டிணீஷம் ( தலைப்பாகை ) அணிந்து சிரசிலே இடப தேவரைப் பூசிக்குக. யாககும்பமூர்த்திக்குதீபாராதனை செய்தபின் கும்பமூர்த்தியை எடுத்து வந்து அவரது சிரசில் வைத்து வேதாத்தியயனமும், திருமுறை பாராயணமும் செய்து கொண்டு சகல உபசாரங்களுடனும், பக்த ஜனங்களுடனும் வீதிப்பிரதட்ணம் செய்க. மூலஸ்தானத்தினுள் பிரவேசித்து சுவாமியின் முன்பு ஆசனமிட்டு கும்பத்தைக் இறக்கிவைக்கவும். பின்பு சக்திகும்பம் அட்டவித்தியேசுரர் கும்பங்களையும் முறைப்படி எடுத்து வந்து வைக்கவும். பின்னர் கும்பத்தில் பதிக்கப்பட்ட மந்திரங்களை பெருமானின் திருப்பெருவடிவத்திலே பதித்து நியசித்து வழிபாடு செய்தபின்பு கும்பத்தை

எடுத்துப் பெருமானின் சிரசிலே அபிஷேகம் செய்யவும். பின்னர் மற்றைய கும்பங்களையும் முறைப்படி எடுத்து அபிஷேகம் செய்து நிவேதித்துப் பாலிகை சாத்தி நீராஞ்சனம் செய்து கொள்ளவும். பின்னர் மற்றைய மூர்த்திகளுக்கும் பாலிகை சாத்தி நீராஞ்சனம் செய்து வழிபாடுகளை நிறைவு செய்து கொள்ளவும்.

பின்னர் எசமானுக்கும் பக்த ஜனங்களுக்கும் அருள் பிரசாதமாகிய விபூதி யாக கும்பதீர்த்தம் பாலிகை முதலியவைகளை வழங்கி ஆசிர்வதிக்குக. மகோற்ஸவத்திலே மகாயாக கும்பாபிஷேகம் மிகவும் முக்கியமான ஒரு பகுதியாகும். பக்த ஜனங்கள் எல்லோரும் அவசியம் இதைத் தரிசித்து வழிபாடு செய்து பயனடைய வேண்டும்.

பாலிகையென்பது முன்னரே யாகசாலையில் முளைக்கும்படி போட்ட நவதானியங்களின் பயிர்களாகும்

## திருவூஞ்சல் விழா

சுவாமியைத் திருவூஞ்சலில் வைத்து விசேட வழிபாடுகளைச் செய்து திருவூஞ்சல் பாக்களைப் பாடி ஊஞ்சல் ஆட்டுவது.

## கொடியிறக்க விழா

திருவூஞ்சல் நிறைவுபெற்ற பின்பு சுவாமியை ஸ்தம்ப சமீபமாகக் கொண்டு வந்து நிறுத்தவும். ஆசாரியர் எசமானுக்குச் சங்கல்பம் செய்து சுத்தி புண்ணியாக வாசனம் செய்யவும். பின்னர் வழமை போன்று ஸ்தம்ப மூர்த்திக்கு அபிஷேக ஆராத

ளைகளைச் செய்யவும். பின் விநாயகப்பெருமானுக்கு விஷேட வழிபாடுகள் செய்து பெருமானே! இன்றேடு இந்த மகோற்ஸவம் நிறைவு பெறுகின்றது. “ தாங்கள் தங்கள் பதிக்குச் சென்று வாருங்கள் ” என்று வேண்டிக் கொள்ளுதல் வேண்டும். இதனை உத்வாசனம் செய்தல் என்று கூறப்படும்.

இவ்வாறு நந்தி தேவருக்கும் தாளம், வேதம் பண் முதலியவைகளைக் கூறி விஷேட வழிபாடுகளைச் செய்து உத்வாசனம் செய்து கொள்ளவும்.

பின்னர் துவசத்தம்பத்திலே வழிபாடு செய்து வந்த சமஸ்த “ தேவர்களையும் அழைத்து தேவர்களே! நீங்கள் உங்கள் உங்கள் பதிகளுக்குச் சென்று வாருங்கள் ” என்று வேண்டிக் கொள்வதாகிய உத்வாசனத்தைச் செய்து கொள்ளவும். பின்னர் கொடித்தம்பத்தின் அடியில் கட்டப்பட்ட கட்டுக்களை அவிழ்க்கவும். இறைவனுக்கு இதுவரையும் பூசித்து வந்த பிரதான கூர்ச்சத்தை ( தர்ப்பை ) எடுத்துக் கொண்டு போய் மூலமூர்த்தியின் மேல் வைத்து “ பெருமானே! இவ்விடத்திலே சாந்நித்தியமாக இருந்து அருள் செய்யவும் ” என்று வேண்டிக் கொள்ளவும். பின்பு ஆசாரியர் தானங்களைச் செய்து கொள்ளவும்.

பின்பு பெருமானுக்கு நீராஞ்சனம் செய்து தேங்காய் உடைத்து, சகல மங்கள வாத்தியங்களும் ஒலிக்கக் கொடியை இறக்குதல் வேண்டும். கொடிப் படத்திலுள்ள இடப தேவரையும், அஸ்திர தேவ

ரையும் அந்த அந்தமூர்த்திகளோடு சேர்த்து வழி பாடு செய்து கொள்ளவும். ஆசாரியார் மங்கள ஆசீர்வாதம் செய்து உற்சவமூர்த்திக்கு நிவேதன நீராஞ்சனம் செய்து கொள்ளவும். பின்னர் எசமா னுக்கும் பக்த ஜனங்களுக்கும் அட்சதை தூவி ஆசீர்வதிக்கவும்.

கொடியிறக்க விழாவிலே சுவாமி வெளி வீதி (இரண்டாம் வீதி) சுற்றிவந்த பின்புதான் உள் வீதி (முதலாம் வீதி) சுற்றுதல் வேண்டும். கொடி யேற்றத் தினத்திலே கிரியைகள் எல்லாம் மேல் இருந்து கீழ் நோக்கிச் செய்யப்படும். கொடியிறக்கத் தினத்திலே கிரியைகள் யாவும் கீழ் இருந்து மேல் நோக்கிச் செய்யப்படும்.

உதாரணமாக:— கொடியேற்ற விழாவிலே சுவாமி உள்வீதி உலாவந்து வெளிவீதி போவது. கொடியி றக்க விழாவிலே வெளிவீதி உலாவந்து உள் வீதி வருவது. இதேபோன்று சகல கிரியைகளும் நிக ழும். கொடியேற்றம் படைத்தலையும் கொடி யிறக்கம் மறைத்தலையும் குறிக்கும்.

சுவாமி வாசலில் வந்தவுடன் நீராஞ்சனம் செய்து சமுகா சொல்லப்படும். அதன் மேல் பிரமசந்தி வழிபாடுகள் செய்யப் பெற்றபின் "ஓ! பிரமதே வரே! சுவாமியினுடைய இந்த மகோற்சவ விழா இன்றோடு நிறைவு பெறுகின்றது. நீர் உமது பதிக் குச் சென்று வாருங்கள்'' எனவேண்டிக்கொள்வதா கிய உத்வாசனத்தைச் செய்தல் வேண்டும். இவ் வாறாக சுவாமி திருவீதி உலாவரும் பொழுது திக்

குப்பாலகர்களையெல்லாம் உத்வாசனம் செய்து கொள்ளுதல் வேண்டும். பின்பு வாசலில் சுவாமி வந்தவுடன் நீராஞ்சனம் செய்து உள்வீதி வலம் வரவும். உள்வீதியிலே சுவாமி வலம் வருகின்ற பொழுது இந்திரன் தொடக்கம் அக்கினி வரையும் சகல வாத்தியங்களும் அக்கினி தொடக்கம் யமன் வரை வேதபாராயணமும் யமன் தொடக்கம் நிருதி வரை திருமுறைப் பாராயணமும் நிருதி தொடக்கம் வருணன் வரை சங்கவாத்தியமும் வருணன் தொடக்கம் வாயு வரை தாளவாத்தியமும் வாயு தொடக்கம் குபேரன் வரை கீதவாத்தியமும் குபேரன் தொடக்கம் ஈசானம் வரை மௌவுனமாகவும் ஈசானம் தொடக்கம் இந்திரன் வரையிலும் சகல வாத்தியங்களும் இசைத்து வருதல் வேண்டும்.

வாசலிலே பாததீர்த்தம் கொடுத்து சித்தே சொல்லி சுவாமியை இறக்கி வசந்தமண்டபத்திலே கொண்டு போய் வைத்து நீராஞ்சனம் செய்தல் வேண்டும்.

## சண்டேசுரர் உற்ஸவம்

சண்டேசுரருக்கு அபிஷேக ஆராதனைகளைச் செய்து உற்சவ சண்டேசுரருக்கு விஷேட பூசை திருவீதி புறப்பாடு செய்விக்கவும். சுவாமியின் திருவீதி உலாப்போன்ற முறையிலே சண்டேஸ்வரப் பெருமானுக்கும் உற்சவத்தைச் செய்து நிறைவு செய்து கொள்ளவும். உற்சவமுடிவில் மூர்த்திகளுக்குக் கட்டிய காப்பினை அவிழ்த்து அதன் பின்பு ஆசாரியர் தமது காப்பினையும் அவிழ்த்து விடவும்.

## ஆசாரிய உற்சவம்

உற்சவத்தைச் சிறப்புற நடத்துவதற்கு மூல காரணராக இருந்தவர் ஆசாரியாரவர்களே ஆவர். இறைவன் குருமூர்த்தியாக எழுந்தருளி வந்து அருள் செய்கின்றார் என்ற நினைப்போடு, ஆலய தர்மகர்த்தாவானவர் ஆசாரியார் அவர்களுக்குத் தம்மால் இயன்ற தட்சணையைக் காளாஞ்சியில் வைத்து, குருவின் திருவடிகளில் சமர்ப்பித்து, அவருக்கு மாலை அணிவித்து, உபசாரங்கள் செய்து அடியார்கள் சூழ்ந்து வர குருமூர்த்தியை சகல வாத்தியங்களும் முழங்கத் திருவீதி வலமாக அழைத்து வந்து, சன்னிதானத்தை அடைதல் வேண்டும்.

ஆசாரியர் இறைவன் திருமுன்னிலையிலே தண்டாகாரமாக வணங்கி நடைபெற்ற விழாவானது பரிபூரணமுற்றதாக அனுக்கிரகிக்கும்படி வேண்டுதல் செய்து யாவருக்கும் சேமம் உண்டாகும்படி பிரார்த்திக்குக.

ஆலயதர்மகர்த்தாவும் அடியார்களும் அப்படியே இறைவனை வணங்கி, குருமூர்த்தியையும் வணங்கி அருட்பிரசாதம் பெற்றுக் கொள்ளவும்.

ஆசாரியருக்குக் கொடுக்கும் தட்சணையை அவர் செய்த கிரியைக்குக் கூலியென்று நினைத்தலாகாது. தட்சணையில்லாத கருமம் பலன்தராது. ஆசாரியாருடைய மனசு திருப்தியடைவதாலே இறைவனும்

திருப்தியுறுகிறுன். ஆதலினுலே ஆசாரியரைத் திருப்திப்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். பின்பு ஆசாரியாரைப் புறப்படச் செய்து, குடை கொடி முதலிய விருதுகளுடனும் மங்கல வாத்தியங்களுடனும் நகரப்பிரதட்சணமாக அழைத்துச் சென்று அவரது மாளிகையில் விட்டுத் திருவருளாகிய வீபூதிப்பிரசாதம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். சிறிதுநேரம் குரு இல்லத்தில் தங்கியிருந்து அவரது உபதேசத்தைக்கேட்டு உள்ளத்தில் பதிந்தவர்களாகத் தங்கள் தங்கள் இல்லங்களுக்குச் சென்று என்றும் குருபக்தி குன்ருதவர்களாக இருக்கக் கடவர்.

சிவாகமங்ளிலே விதிக்கப்பட்ட சம்ஸ்கார தீட்சையினுலே வாகீஸ்வரர் வாகீஸ்வரியிடத்திலிருந்து தோன்றியவராகையினுல், ஆசாரியரை (குரு) மனிதரென்று கருதலாகாது. ஆசாரியாரை மனம் வாக்குக் காயங்களினுலே சிரத்தையுடன் வழிபாடு செய்வோர் போக மோட்சங்களைப் பெறுவர்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவைச் சிந்தித்தல் தானே.

சுபம்

## அபிஷேகத் திரவியங்களும் ஒழுங்கு முறைகளும்

| | |
|---|---|
| எண்ணெய்க் காப்பு | தேன் |
| அரிசி மாக் காப்பு | சர்க்கரை |
| அபிஷேகக் கூட்டுக் காப்பு | கருப்பஞ்சாறு |
| மஞ்சள் மாக் காப்பு | எலுமிச்சம்பழச் சாறு |
| பஞ்சகெளவியம் | தோடம்பழச்சாறு |
| இரச பஞ்சாமிர்தம் | மாதுளம்பழச்சாறு |
| பல பஞ்சாமிர்தம் | இழநீர் |
| பால் | வீபூதி |
| தயிர் | சந்தனம் |
| நெய் | குங்குமம் |

எண்ணெய்க் காப்புக்கு சந்தனாதித் தைலம் விஷேடமானது. பஞ்ச கவ்வியம்:- விதிப்படி அமைத்து வழிபாடு செய்யப்பெற்ற பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பனவாகும்.

இரச பஞ்சாமிர்தம்:- விதிப்படி அமைத்து வழிபாடு செய்யப்பெற்ற பால், தயிர், நெய், தேன், சர்க்கரை யென்பவற்றினது தொகுதியாம்.

பல பஞ்சாமிர்தம் :- முன் கூறப்பட்ட இரச பஞ்சாமிர்தத்தோடு கூட்டி அமைக்கப்பட்ட வாழைப் பழம், மாம்பழம், பலாப்பழம் ஆகிய கனிந்த முப்பழங்களினது தொகுதியாம்.

எண்ணெய்க் காப்பு :- இதனைச் சாத்தும்பொழுது வாசனையூட்டப்பெற்ற எண்ணெயை ஓர் அகன்ற பாத்திரத்தில் விட்டு இரண்டு கைகளாலும் அள்ளி எடுத்து உள்ளன்போடு எனக்கு இப் பிறவியில் திருமேனி தீண்டும் பேறு கிடைத்ததே என்ற பேரானந்தத்துடன் இறைவனது அங்கங்களிலெல்லாம் சேரும்படி உளம் நெகிழ்ந்து சாத்துதல் வேண்டும். அதன்பின்பு சுவாமியின் அங்கங்களையெல்லாம் வருடிப் பிடித்துவிட்டு வணங்க வேண்டும்.

தாமிரப் பாத்திரத்தில்விட்ட பாலும், வெண்கலப் பாத்திரத்தில் விட்ட இளநீரும் மதுவுக்குச் சமமானது. ஆதலின் இளநீரைத் தவித் தனி முகிழ் திறந்து அபிஷேகம் செய்தல் உத்தமம்.

நெய்யால் அபிஷேகம் செய்தவுடன் இள வெண்னீரினுல் அபிஷேகம் செய்யவும்.

இளநீர் அபிஷேகம் செய்த பின்பு சகஸ்சிர தாரை கொண்டு சுத்தோதகம் அபிஷேகம் செய்தல் வேண்டும். அப்பொழுது பத மந்திரம் செபித்தல் வேண்டும்.

அன்னபிஷேகம்:— சுத்தமான வெள்ளை அரிசிகொண்டு பக்குவமாகச் சமைக்கப்பட்ட அன்னத்திலே நெய் விட்டு அன்பினேடு அபிஷேகம் செய்தல் வேண்டும், இறுதியாகச் சந்தனக் குழம்பு அபிஷேகம் செய்து புஸ்பம் சாத்தி வழிபாடு செய்துகொள்ளவும். அதன்பின்புமுறைப்படி அமைத்து வழிபாடு செய்யப்பெற்ற சங்கங்களையோ, அல்லது கும்பங்களையோ வீபூதிப் பிரதட்சணமாகக் கொண்டுவந்து கும்பத்திலுள்ள மூர்த்திகளை இறைவனின் திருப்பெரு வடிவத்திலே ஆவாகனம் செய்து முன் பூசித்த முறைப்படி அபிஷேகம் செய்யவும்.

பாத்தியம்:— இறைவனின் திருவடிகளிலே மிருக முத்திரையினுலே 'நமக' என்று இருமுறை தீர்த்தத்தை விடுதல்.

ஆசமனம் :— இறைவனின் முகங்களில் மிருகமுத்திரையினுலே மூன்றுமுறை 'ஸ்வதா' என்று தீர்த்தத்தைவிடுதல்.

அர்க்கியம் :— இறைவனின் திருமுடியிலே மிருக முத்திரையினுலே ஒரு தரம் 'ஸ்வாகா' என்று தீர்த்தத்தை விடுதல்.

பாத்தியத்துக்குரிய திரவியம்:— சந்தனம், இலாமிச்சம் வேர், அறுகு, வெண்கடுகு என்பவையாகும்,

ஆசமனத்துக்குரிய திரவியம் :— பச்சைக் கர்ப்பூரம் சாதிக்காய், கராம்பு, ஏலம், பூலாங்கிழங்கு, சண்பக மொட்டு.

அர்க்கியத்துக்குரிய திரவியங்கள் :— ஜலம், பால், தர்ப்பை நுனி, அக்ஷதை, எள், நெல்லு, சம்பாநெல், வெண் கடுகு.

## அபிஷேகப் பலன்கள்

சந்தனாதித்தைலம் சுகத்தையும், மாக்காப்பு மலநாசத்தையும், நெல்லிக்காப்பு ரோகநாசத்தையும் மஞ்சள்மா இராசவசியத்தையும், பஞ்சகவ்வியம் ஆன்ம சுத்தியையும், இரச பஞ்சாமிர்தம் வெற்றியையும், பல பஞ்சாமிர்தம் செல்வத்தையும், பஞ்சபலோதகம் மந்திர சித்தியையும், பால் ஆயுள் விருத்தியையும், தயிர் பிரஜா விருத்தியையும், நெய் மோக்ஷத்தையும், சங்கீதவன்மையையும், கருப்பஞ்சாறு நித்தியசுகத்தையும், சர்க்கரை சத்துரு நாசத்தையும், வாழைப்பழம் பயிர் விருத்தியையும், பலாப்பழம் லோகவசியத்தையும், தோடம்பழம் பூமிலாபத்தையும், எலுமிச்சம்பழம் மிருத்தியுநிவாரணத்தையும், அன்னம், அரசுரிமையையும், இளநீர் சற்புத்திரப் பேற்றையும் அவமிருத்து நாசத்தையும், கோரோசனை தீர்க்காயுளையும், பச்சைக்கற்பூரம் பயநாசத்தையும், கஸ்தூரி வெற்றியையும் பன்நீர் சாலோகத்தையும், சந்தனக்குழம்பு சாயுச்சியத்தையும், சகஸ்திரதாரை ஞானத்தையும். ஸ்நபனம் ஜென்ம சாபல்யத்தையும், சாரூப்பியத்தையும் கொடுக்குமென்று வீராகமத்தில் கூறப்படுகின்றது.

# கொடியேற்று விழாப் பட்டோலை

மஞ்சள்
நெல்லு
பச்சை அரிசி, தானத்திற்கு அரிசி
பயறு, உழுந்து, எள்ளு, தேங்காய்
பழவகைகள், நீற்றுப்பூசினிக்காய் 2
தேங்காய் எண்ணெய்
நல்லெண்ணெய்
வெற்றிலை, பாக்கு, பாக்குச்சீவல்
சர்க்கரை, கற்கண்டு
கொடிச்சீலை, நூற்கயிறு, சிவப்புக்காவி
குருக்கள் வேட்டி, சால்வை
சாதகாசாரியார் வேட்டி சால்வை

பரி சாரகர் வேட்டி, சால்வை
கும்பத்துக்கு கட்ட வேட்டி சால்வை
சால்வைத் துண்டு
பட்டுத்துண்டு
சுவாமிக்குச் சாத்தப் பட்டு வகை
கொடிமரத்துக்குக் கட்ட பட்டுச் சால்வை
சிவப்பு நிறம், பச்சை நிறம் - 2

## மருந்துக்கடைப் பொருட்கள்

விபூதி
சந்தணம்
குங்குமம்
அபிஷேகக் கூட்டு
அபிஷேகத் திரவியம்
ஊதுபத்தி
தசாங்கம்
சாம்பிராணி
பன்னீர்
வாசனைத்திரவியங்கள்
நெற்பொரி
நவதானியம்
நெய்
தேன்
விளைவு சூடம்
கழிநூல் பந்து 30
பஞ்ச வர்ண நூல் 4
ஏலக்காய்
சாதிக்காய்
கோட்டம்
கராம்பு
வெண்கடுகு
இலவங்கப்பட்டை
இலாமிச்சம் வேர்
வெட்டி வேர்

பூலாங் கிழங்கு
முந்திரிகை வற்றல்
சமித்து தர்பை, ஓமச் சரக்கு வகை
மஞ்சள் மா, அரிசி மா
பால், தயிர், இளநீர், கரும்பு
சில்லறைக் காசு
காய் பிஞ்சு வகை
வைக்கோல்
பூமாலை, சரப்பந்து, உதிர் பூ, பத்திரம்

### தேவையான பொருட்கள்

குடம் 4
கெண்டி 3
செம்பு 32
குத்துவிளக்கு
சிறுசட்டி 12
மண்வெட்டி
தாம்பாளம்
மாவிலை
வாழையிலை 150

## இரவு விழா

### மகாயாகாரம்பம்

நெல்லு
பச்சைஅரிசி
தானத்திற்கு அரிசி
பயறு
உழுந்து
எள்ளு
தேங்காய்
வெற்றிலை
பாக்கு, பாக்குச் சீவல்
வாழைக்குலை
பழவகைகள்

பாக்கு
சர்க்கரை
கற்கண்டு
குருக்கள் வேட்டி சால்வை
கும்பத்துக்கு வேட்டி சால்வை
பட்டுத்துண்டுவகைகள்
சுவாமிக்கு சாத்த பட்டுவகைகள்
காய் பிஞ்சு வகைகள்
பால், தயிர், இளநீர், கரும்பு
சில்லறைக் காசு
பூமாலைகள், சரப்பந்து
வாழையிலை
கழி நூல்பந்து,
பஞ்சவர்ண நூல்
கும்பச் சரக்குவகை
ஓமச்சரக்குவகை
வாசனைத்திரவியம்
நெய்
பன்னீர்
நவதானியம்
நெற்பொரி
சமித்துவகை

தெட்சணை வகை

குரு தெட்சணை
சாதகாசாரியார் தெட்சணை
பரிசாரகர் தெட்சணை
சாத்துப்படி அலங்காரம்
மேளம்
சங்கவாத்தியம்
கட்டாடி

பொருட்களின் விபரங்களை அவ்வப்போது சிவாச்சாரியர்களிடம் கேட்டுஅறிந்துகொள்க.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 2 | ஒமமும் | ஓமமும் |
| 2 | 20 | ஒமம் | ஓமம் |
| 5 | 6 | அர்ச்னை | அர்ச்சனை |
| 5 | 18 | பெருட்களை | பொருட்களை |
| 6 | 24 | ஒன்ப | ஒன்பது |
| 7 | 7 | முறைப்டி | முறைப்படி |
| 10 | 11 | மூர்திக்குரிய | மூர்த்திக்குரிய |
| 11 | 6 | மூர்திகளுக்கு | மூர்த்திகளுக்கு |
| 12 | 3 | நூல்க்கயிறு | நூற்கயிறு |
| 14 | 13 | மலமூர்த்தி | மூலமூர்த்தி |
| 15 | 6 | என்ரு | என்று |
| 15 | 11 | மண்டூகம் | மண்டூகபதம் |
| 17 | 1 | அங்குரார்பணம் | அங்குரார்ப்பணம் |
| 17 | 4 | பன்னிரெண்டு | பன்னிரண்டு |
| 18 | 2 | உசற்ஸவ | உற்ஸவ |
| 18 | 3 | முதலியன | முதலிய |
| 18 | 10 | வீபூதி | விபூதி |
| 19 | 5 | யார்கேஸ்வா | யாகேஸ்வர |
| 19 | 8 | அக்கினிகாரீயம் | அக்கினிகாரியம் |
| 20 | 13 | பலீபீட | பலிபீட |
| 21 | 11 | நீரரஞ்சனம் | நீராஞ்சனம் |
| 21 | 15 | முலமூர்த்தி | மூலமூர்த்தி |
| 21 | 21 | பாரயண | பாராயண |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 22 | 1 | உற்சஸ | உற்ஸவ |
| 23 | 10 | தத்தாளத்துடன் | தாளத்துடன் |
| 23 | 13 | கொள்வதற்க்காக | கொள்வதற்காக |
| 24 | 5 | தேங்காய்யுடைத்து | தேங்காயுடைத்து |
| 24 | 15 | வஸ்திரகட்டி | வஸ்திரங்கட்டி |
| 24 | 17 | தற்பை | தர்ப்பை |
| 25 | 22 | விதிச்சுற்று | விதிச்சு |
| 27 | 21 | செய்விக்க | செய்வித்தல் |
| 28 | 5 | துவாரபாலர்கள் | துவாரபாலகர்கள் |
| 29 | 5 | பஞ்சாஸ | பஞ்சாசன |
| 33 | 7 | பாலர்கள் | பாலகர்கள் |
| 34 | 2 | விஷே | விஷேட |
| 36 | 14 | வீபூதி | விபூதி |
| 36 | 22 | கும்பத்தைக் | கும்பத்தை |
| 39 | 11 | கீழ்நேக்கி | கீழ்நோக்கி |
| 39 | 22 | ஓ! | ஓ! |
| 40 | 12 | மௌவுனமாகவும் | மௌனமாகவும் |

## எமது வெளியீடுகள்:-

- கேதார கௌரி விரதம்
- முத்திராலட்சண விதி — ரூ 4-50
- மகோற்ஸவ கால தமிழ் வேத திருமுறைத்திரட்டு — ரூ 6-90
- விவாகக்கிரியை விளக்கம் — ரூ 4-50
- மகா கும்பாபிஷேக தத்துவங்கள் — ரூ 4-00

---

## கிடைக்குமிடங்கள்

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

---

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்

---

அகில இலங்கைச் சைவக் குருமார் அர்ச்சகர் சபை
மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பழை: விலை ரூ - 8-50

---

விரைவில் வெளிவரவிருக்கிறது.
அபரக்கிரியை விளக்கம்